இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 12-02-2025

# டெல்லியைக் கைப்பற்றி என்ன பயன்?

அரவிந்த கெஜ்ரிவால் முதலமைச்சராக இருக்கிறார் என்பதற்காக டெல்லி மாநிலத்தின் அனைத்து அதிகாரங்களையும் பறித்து அதனை 'டம்மி' மாநிலமாக மாற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போது அந்த 'டம்மி' மாநிலத்தைக் கைப்பற்றிவிட்டதாக மகிழ்ச்சி அடைகிறது. 'டம்மி' மாநிலத்தில் ஆட்சியை அமைப்பதால் என்ன பயன்?

11 ஆண்டுகளுக்குப் பிறகு ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சியை அகற்றி இருக்கிறது பா.ஜ.க. டெல்லி தேர்தலில் கடைசியாக 1993 ஆம் ஆண்டு வெற்றி பெற்றது பா.ஜ.க. 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க. வெற்றியைப் பெற்றுள்ளது. 'டெல்லியை பேரழிவில் இருந்து விடுவித்து விட்டதாக' பிரதமர் மோடி அறிக்கை கொடுத்துள்ளார். டெல்லி என்ற மாநிலத்தின் அதிகாரத்தை அழித்ததே பா.ஜ.க. அரசுதானே?

டெல்லி மாநிலத்தின் அதிகாரத்தையே பறிக்கும் சட்டத்தை 2023 மே மாதம் 19 ஆம் தேதி அன்று நிறைவேற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேசிய தலைநகர் டெல்லி அரசின் சட்டத்தை (1991) திருத்தும் வகையில் இதனைக் கொண்டு வந்தார்கள். ' குடிமைப் பணி அதிகாரிகளை கட்டுப்படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டெல்லி அரசுக்கு அதிகாரம் உண்டு' என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிராகரிக்கும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

உச்சநீதிமன்றத்தின் மேற்கண்ட தீர்ப்புக்கு சவால்விடும் விதமாக, டெல்லி யூனியன் பிரதேச அரசின் நிர்வாக அதிகாரத்தை பறிக்கும் வகையில், **தேசிய தலைநகர் பிரதேச டெல்லி அரசு சட்டத்தைத்** (The Government of National Capital Territory of Delhi Act - 1991) **திருத்தி, தேசிய தலைநகர் குடிமைப் பணி ஆணையத்தை** (National Capital Civil Service Authority) **உருவாக்குவதற்கான அவசரச் சட்டத்தை பிறப்பித்தார்கள்.**

❖ **இதன் மூலம் அதிகாரிகள் நியமனம், பணியிட மாற்றம் ஆகியவற்றை அந்த மாநில அரசு செய்ய முடியாது. 'தேசிய சிவில் சேவை ஆணையம்' என்ற அமைப்புதான் செய்ய முடியும்.இந்தக் குழுவில் மாநில அரசுடன் இணைந்து ஒன்றிய அரசு அதிகாரிகளும் இருப்பார்கள். இவர்கள் முடிவெடுத்து துணை நிலை ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். இதனை ஏற்பதும் மறுப்பதும் ஆளுநரின் விருப்பம் ஆகும்.**

❖ **தனது சொந்த விருப்பத்தின் பேரில் டெல்லி சட்டசபையை ஆளுநர் கூட்டலாம். பேரவை நடக்கும் நாட்களை அதிகரிக்கலாம். குறைக்கலாம்.**

❖ **அரசின் நிர்வாகத்தில் குறைபாடு இருந்தால் அதனை அமைச்சருக்குச் சொல்லாமல், நேரடியாக ஆளுநருக்கு அதிகாரிகள் கொண்டு போகலாம்.**

❖ **அதிகாரிகள், வாரியங்கள், ஆணையங்கள், சட்டபூர்வ அமைப்புகள் அமைக்கும் அனைத்து அதிகாரமும் ஆளுநருக்கே உண்டு.**

இதுதான் அந்தச் சட்டம். மொத்தமாகச் சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ, அமைச்சரவைக்கோ எந்த அதிகாரமும் இல்லை. டம்மியாக உட்கார்ந்து இருப்பார்கள். அப்படித்தான் உட்கார வைக்கப்பட்டார் அரவிந்த் கெஜ்ரிவால். புதிதாக வரப்போகும் பா.ஜ.க. முதலமைச்சரும் அப்படிதான் டம்மியாக உட்கார வைக்கப்படுவார்.

ஆம் ஆத்மி ஆட்சியில் இருக்கிறது, அரவிந்த் கெஜ்ரிவால் அசைக்க முடியாதவராக இருக்கிறார், 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகித்து அந்தக் கூட்டணியை பலப்படுத்தி வருகிறார் என்பதற்காகவே டெல்லி மாநில அரசை டம்மி ஆக்க இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

டெல்லி சட்டமன்றத்தின் ஜனநாயக நடைமுறையில் துணைநிலை ஆளுநர் தொடர்ச்சியாகத் தலையிடுவது, டெல்லி வரவு செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்வதைத் தடுப்பது, அன்றாட நிருவாகச் செயல்பாட்டை முடக்குவது ஆகிய செயல்களை அம்மாநில துணை நிலை ஆளுநர் தொடர்ந்து செய்து வந்தார்.

அதற்கு முன்னதாக அரவிந்த் கெஜ்ரிவாலை முடிந்தவரை மிரட்டினார்கள். அவரைச் சுற்றி இருப்பவர்களுக்கு பேரம் பேசினார்கள். இதனை அரவிந்த் கெஜ்ரிவாலே வெளிப்படையாக பேட்டி கொடுத்தார். 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பேட்டி அளித்த அரவிந்த் கெஜ்ரிவால், " **ஆம் ஆத்மி கட்சியில் இருந்து விலகினால் டெல்லி முதலமைச்சர் ஆக்குவதாக மணிஷ் சிசோடியாவிடம் பா.ஜ.க. பேரம் பேசியது. அவர் மறுத்துவிட்டார். அந்தக் கட்சியினர் இப்போது என்னை நாடினார்கள். குஜராத் சட்டசபைத் தேர்தலில் எங்கள் கட்சி போட்டியிடாமல் விலகிக் கொண்டால் நாங்கள் சத்யேந்தர் ஜெயின், மணிஷ் சிசோடியா ஆகிய இருவரையும் விட்டு விடுகிறோம். அவர்கள் மீதான எல்லா வழக்குகளையும் கைவிட்டு விடுகிறோம் என்று பேரம் பேசினார்கள்.** என் நண்பர் வழியாக வந்து இந்தப் பேரத்தை நடத்தினார்கள்" என்று சொன்னார்.

அதாவது ஒரே நேரத்தில் அரவிந்த் கெஜ்ரிவாலிடமும் பேரம் பேசுவது, அவருக்கு எதிராக அவர் அருகில் இருப்பவரிடமும் பேரம் பேசுவது. இரண்டிலும் தோல்வி அடைந்த நிலையில் டெல்லி மாநிலத்தின் அதிகாரத்தையே சீர்குலைத்தார்கள். 'முதலமைச்சராக இருந்து கொள், ஆனால் அது வெறும் டம்மி பதவி ' என்று ஆக்கினார்கள்.

**"அனைத்து விவகாரங்களிலும் ஒன்றிய அரசு தலையிட்டால் டெல்லியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எதற்கு?" என்று கேட்டது உச்சநீதிமன்றம். ( 2023 ஜனவரி 13) இப்போது நாம் பா.ஜ.க.விடம் கேட்பதும் இதுதான்.... "எந்த அதிகாரமும் இல்லாத டெல்லி மாநில ஆட்சியைக் கைப்பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்?"**

••

## குடிமனைப் பட்டா பிரச்சினைக்குத் தீர்வு!

# தமிழ்நாடு அரசின் முடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வரவேற்பு!

## மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அறிக்கை!



**சென்னை, பிப். 12 -**

**குடிமனைப் பட்டா பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தமிழ்நாடு அரசின் முடிவுக்கு மாநிலச் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னையை சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களில் 32 கிலோ மீட்டருக்குள் உள்ள பகுதிகளில் 29,187 குடும்பங்களுக்கும், அதே போல் சென்னை மாநகராட்சி தவிர்த்து மற்ற மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடங்களில் வசிக்கும் 57,000 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கவும் ஒட்டு மொத்தமாக 86,000 குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கிட தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அரசு புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, பெல்ட் ஏரியா, நீர்நிலைப் பகுதிகளில் ஏழை, எளிய அடித்தட்டு மக்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் இடத்திற்கு பட்டா வழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆர்ப்பாட்டம், மறியல், காத்திருப்பு போராட்டம் என பல்வேறு இயக்கங்களை மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது. இந்த இயக்கங்களில் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில், நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இம்முடிவை சி.பி.ஐ. (எம்) வரவேற்கிறது. அதேநேரத்தில், ஏற்கனவே நீர்நிலை மற்றும் ஆட்சேபனைக்குரிய புறம்போக்கில் பல ஆண்டுகளாக சாதாரண மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் வசித்து வருகிற ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு என்கிற பகுதி குடியிருப்பு பகுதிகளாக மாறி இனி வேறு வகையில் பயன்படுத்த முடியாததாகவும், பல லட்சக்கணக்கான மக்களின் குடியிருப்பு உரிமை சம்பந்தப்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட பகுதிகளில் வசிக்கக் கூடிய மக்களுக்கும், அரசு ஆவணங்களில் உரிய மாற்றம் செய்து பட்டா வழங்கிட வேண்டுமென தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் இது! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது!

# ஒன்றிய பட்ஜெட்டில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்!

## மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் பேச்சு!



**புதுடெல்லி, பிப்.12 -**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த பட்ஜெட் கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் என்றும், வேலைவாய்ப்பு திண்டாட்டத்தை போக்க இந்த பட்ஜெட்டில் திட்டங்கள் எதுவுமில்லை என்றும் மக்களவையில் ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கழக மக்களவை குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறி உரையாற்றினார்.**

**மக்களவையில் தயாநிதி மாறன் பேசியதாவது:-**

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3வது பதவிக்காலத்தின் முதல் முழு ஆண்டு பட்ஜெட் மீண்டும் சாமானியர்களை விட கார்ப்பரேட்டுகளுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் 8 சதவீத வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதனால் இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கக் கூடிய அனைத்தையும் நீங்கள் பெற்றிருந்தீர்கள். அதற்குப் பதிலாக எங்களுக்குக் கிடைத்தது, வெற்று வாக்குறுதிகள் மற்றும் பக்கச்சார்பான வரவு செலவுத் திட்டங்கள்தான்.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 87.35 ஆக சரிந்துள்ளது. 2025 ஜனவரியில் மட்டும் ரூ.70 ஆயிரம் கோடி அன்னிய முதலீடுகள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளன. இது ஒரு மாதக் கதைதான். எதிர்க் கட்சிகள் இதைப்பற்றி எல்லாம் பேசும் போது நிதியமைச்சர் அவையில் இல்லாமல் போய்விடுகிறார். அப்படியானால், அவர் பதிலளிக்கும்போது நாங்களும் புறக்கணிப்போம்.

### டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு!

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ரூ.68ஆக இருந்த போது, இன்றைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மன்மோகன்சிங் அரசை ராஜினாமா செய்யக் கோரி பேட்டியளித்தார். இப்போது 87.5 ஆக உள்ளது. இப்போது நீங்கள் ராஜினாமா செய் வீர்களா அல்லது நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்க வேண்டுமா?

வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்க இந்த பட்ஜெட்டில் எதுவுமில்லை. வேலைவாய்ப்பை உருவாக்குவது காலத்தின் தேவை, ஆனால் 2.5 கோடி பேர் வேலையில்லாமல் இருந்தாலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பெரிய முயற்சிகள் எதுவும் இல்லை. இந்தியாவின் ஏற்றுமதியில் 45% வழங்கும், 7.5 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் சிறு குறு தொழில் நிறுவனங்கள் இந்த பட்ஜெட்டில் இருந்து வரி விலக்கு அல்லது ஆதரவைப் பெறவில்லை. ஆண்டுதோறும் 6070 லட்சம் இளைஞர்கள் வேலைதேடும் சந்தையில் நுழைகிறார்கள், ஆனால் அவர்களின் வேலைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை. அனைத்து பொதுத்துறை நிறுவனங் களும் விற்கப்பட்டுவிட்டன அல்லது விற்கப்படும் நிலையில் உள்ளன. முன்னதாக அவற்றை எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க அவற்றைப் பயன்படுத்தினோம். இப்போது அதுவும் உங்கள் கையில் இல்லை, எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க அம்பானிகளிடமும், அதானிகளிடமும், டாடாக்களிடமும் நாங்கள் கெஞ்ச வேண்டும்.

### பெட்ரோலில் பெரும் லாபம்!

பெட்ரோல் விலையில் நீங்கள் பெரும் லாபம் ஈட்டியுள்ளீர்கள். கொரோனா காலத்தில் கூட உலகம் முழுவதும், சந்தை விலை குறைவாக இருந்த போது எரிபொருளின் மீதான வரிகள் மற்றும் கலால் வரிகளின் மூலம் அரசாங்கம் அதிக லாபம் ஈட்டியுள்ளது. 2019-20ல் உங்கள் கருவூலத்திற்கு பெட்ரோலியத் துறையின் மொத்த பங்களிப்பு ரூ.5,55,370 கோடி, 2020-21 ரூ.6,72,718 கோடி, 2021-22ல் ரூ.7,74,425 கோடி, 2022-23ல் ரூ.7,48,718 கோடி, 2023-24ல் ரூ.7,51,155.9 கோடி, 2024-25-ல் கடந்த 6 மாதங்களில் மட்டும் ரூ.3,39,185.5 கோடி.

உக்ரைன் போர் தொடங்கிய போது, ரஷ்யாவின் சந்தை விலையான 120 டாலருக்கு பதில் 60 டாலருக்கு எரிபொருளை விற்றுக்கொண்டிருந்தபோது, நீங்கள் ரிலையன்ஸ் நிறுவனங்களை எதிர்பாராத லாபத்தைப் பெற அனுமதித்தீர்கள், உங்கள் நண்பர்கள் அனைவரையும் லாபம் ஈட்ட அனுமதித்தீர்கள். ஆனால் 50% குறைப்பு பலனை நீங்கள் சாமானியர்களுக்கு வழங்கியிருக்கலாம். இந்த பட்ஜெட் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. இது மக்கள் விரோத, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானாவுக்கு எதிரான மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் 98% மக்கள் தொகைக்கு எதிரானது. எனவே நிதியமைச்சர் இன்னும் நேர்மறையாக இருக்க வேண்டும். ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பட்ஜெட் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

### எத்தனை நதிகளை இணைத்தீர்கள்?

2019ல் ஜல் சக்தி என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கியது. நதிகளை இணைப்பதற்காகவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக மறு பெயரிடுகிறீர்கள் என்று சொன்னீர்கள். வருடங்கள் ஆகிவிட்டது. எத்தனை நதிகளை இணைத்தீர்கள், எத்தனை வெள்ளத்தை தடுத்தீர்கள்?

### பீகாருக்கு அதிக திட்டங்கள்!

பீகார் தேர்தலை முன்னிட்டு அங்கு அதிக திட்டங்களை அறிவித்துள்ளனர். ஆனால் தென் மாநிலங்களை நியாயமற்ற முறையில் நடத்துகிறார்கள். தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால், அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் போனஸ் அல்லது மாயாஜால அறிவிப்பை பார்க்கலாம். கன்னியாகுமரி திருவனந்தபுரம் தொழில் வழித்தடம் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பெங்களூரு, சென்னை, ஐதராபாத் போன்ற தகவல் தொழில்நுட்ப மையங்கள் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்தாலும், அவர்களுக்கு எந்த சலுகையும் இல்லை.

தமிழகத்திற்கு எதிரான பாகுபாடு கடந்த வாரத்தில், தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் ரூ.2,000 கோடியை மத்திய அரசு எடுத்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கு திருப்பி யளித்துள்ளது. மாணவர்களைத் தண்டிக்கும் ஒன்றிய அரசு பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறோம். எங்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். எங்கள் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வோம். எங்கள் சொந்த நிதியில் அவர்களுக்கு ஆதரவளிப்போம். இந்தியாவிலேயே திராவிட மாடல் அடிப்படையில் வெற்றி பெற்ற மாநிலம் தமிழ்நாடு' என்றார்.

### தமிழ்நாடு முதல்வராக முயன்றது போல் பெரிய பதவிக்கு முயற்சிக்கிறார் நிர்மலா!

இன்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இவ்வளவு உயரங்களை எட்டியிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் பெண்கள் கல்வி கற்கும் பெரியார் என்ற ஒரு மனிதனால்தான். அதை அவர் மறக்கவே கூடாது. 2017 ஆம் ஆண்டு, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அவர் தமிழ்நாட்டில் இருந்தார். முதல்வராகலாம் என்று நினைத்து, அந்த பதவிக்காக ஏங்கிக் கொண்டிருந்ததால், இந்த ஆண்டு நீட் வராது, இந்த ஆண்டு தமிழகத்துக்கு நீட் விலக்கு என்று கூறினார்.

அனைத்து மாணவர்களும் நம்பினர். ஆனால் நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் அவர் சொன்னது நிறைவேறாது என்று எங்களுக்குத் தெரியும். எங்கள் மக்களை கவர, அவர் முயற்சித்தார். அதேபோன்று அவர் இப்போது ஒரு பெரிய பதவிக்காக முயற்சி செய்து இருக்கிறார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் நாங்கள் அவரை வாழ்த்துகிறோம்.

இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடி. 2023-24ல் 8 கோடி பேர் (5.7%) மட்டுமே வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்துள்ளனர். இவர்கள்தான் நேரடி வரி செலுத்துபவர்கள். அவர்களில் 4.15 கோடி பேர் மாதம் ரூ.50,000க்கும் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள். 1.5 கோடி பேர் மாதத்திற்கு ரூ.1 லட்சத்துக்கு மேல் சம்பாதிப்பதால், வரிச் சலுகைக்கு அவர்கள் தகுதி பெறவில்லை. இதனால் பயன் பெறும் 2.5 கோடி பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர். இது மக்கள் தொகையில் 1.75% மட்டுமே. இந்த நடவடிக்கை டெல்லியில் பாஜ வாக்குகளைப் பெற உதவியது. இது ஒரு குறுகிய கால இனிப்பு. நிலையான தீர்வு அல்ல. ஆனால் வளர்ச்சி தேக்கமடைந்தால், விலைவாசி உயர்ந்துள்ளதால் அவர்களுக்கும் இதில் எந்த பலனும் இல்லை. எஞ்சிய 98.25% இந்தியர்களுக்கு 12 லட்சம் வருமான வரிச் சலுகையால் எந்த லாபமும் இல்லை. இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் மறைமுக வரிகள் மூலம் அதிகள வில் செலுத்துகிறார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் உரையாற்றினார்.